செய்தி வெளியீடு எண். 182 நாள்: 06.04.2018

# தமிழக அரசின் விவசாயிகளுக்கான கைபேசி செயலி "உழவன்"

மின்னணு வேளாண்மையில் தமிழகம் அகில இந்திய அளவில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

தமிழக அரசு வேளாண்மைத் துறையினால் 2010-2011-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வேளாண் தகவல் சேவை வழங்குவதற்காக TRAGRISNET என்ற இணைய தளம் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தேசிய அளவில் முதன் முறையாக 70 இலட்சம் விவசாயிகளின் அடிப்படை தகவல்கள், பண்ணை மற்றும் மண் வளம் சார்ந்த தகவல்கள் வலைத் தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு அதற்கான ஆலோசனைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் இத்துறையினால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த சேவையை பாராட்டி மத்திய அரசு இரண்டு முறை தமிழ்நாட்டிற்கு தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் "தங்க விருதும், ரூபாய் இரண்டு இலட்சம் ரொக்கப் பரிசும்" வழங்கி கௌரவித்தது. மேலும், ஸ்கோட்ச் (Skotch) நிறுவனத்தின் உயரிய விருதான "பிளாட்டினம் விருதும்" வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையில் மின்னணு தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமாக வேளாண் துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் தகவல்கள் அனைத்தும் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதற்காக "உழவன்" என்ற கைபேசி செயலி தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த செயலி மூலம் விவசாயிகளுக்கு ஒன்பது முக்கிய அடிப்படை சேவைகள் வழங்கப்படவுள்ளன.

**சேவை 1: அரசின் வேளாண் மானியத் திட்டங்கள் பற்றி அறிதல்**

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்ட இன வாரியாக வழங்கப்படும் மானிய சதவீதம் குறித்தான விவரங்கள் மற்றும் பயனாளிகள் தகுதிகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**சேவை 2:- பயனாளி திட்ட முன்பதிவு :** விவசாயிகள் தங்களுக்கு தேவையான உயர் மதிப்புள்ள இடுபொருட்களான - டிராக்டர், பவர் டில்லர் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் நிழல் வலைக் குடில், பசுமைக் குடில் போன்ற தோட்டக்கலை சார்ந்த திட்டப் பயன்களை மானியத்தில் பெறுவதற்கு இச்சேவை மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்தபின் மூதுரிமை எண் விவசாயியின் கைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். இச்சேவையின் மூலம் திட்டப் பயன்கள் ஒரு சில விவசாயிகளுக்கு மட்டும் செல்வது தவிர்க்கப்படும்.

**சேவை 3:- பயிர் காப்பீடு விவரம் அறிதல்** அகில இந்திய அளவில் முதல் முயற்சியாக பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளும், தாங்கள் பயிர் காப்பீடு செய்த நிலையினை இழப்பீடு பெறும் வரையில் தொடர்ந்து இச்சேவையின் மூலம் எளிதாக தெரிந்து கொள்ளலாம். இதற்கு விவசாயிகள் பயிர் காப்பீடு கொடுக்கப்பட்ட தொலைபேசி எண் (அல்லது) நில புல எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும்.

**சேவை 4:- உரம் இருப்பு அறிதல் :** 11,980 கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடைகளில் முக்கிய உரங்களின் இருப்பு விவரங்களை நிகழ் நிலை முறையில் (Real Time) உடனுக்குடன் தெரிந்து, அதனைப் பெற்று காலத்தே பயிர் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளலாம். இதன் மூலம் உர விற்பனையில் வெளிப்படை தன்மை ஏற்படுத்தப்படுகிறது.

**சேவை 5:- விதை இருப்பு விவரம் அறிதல் :** விவசாயிகள் தங்கள் வட்டாரத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் கடைகளில் உள்ள விதை இருப்பினை நிகழ் நிலை முறையில் (Real Time) இச்சேவையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். சுமார் 880 அரசு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 8400 தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பயிர் மற்றும் இரக வாரியான விதை இருப்பு தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் மேலாளாரின் கைபேசி மற்றும் முகவரி இச்சேவை வாயிலாக அளிக்கப்படுவதால் விவசாயிகள் பயிர் பருவ காலத்தில் உடனடியாக விதை வாங்குதல் எளிதாகிறது.

**சேவை 6:- வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் :** வேளாண் இயந்திரமாக்கல் முன்னேறி வரும் இத்தருணத்தில், விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு பயன்படுத்திக் கொள்ள 76 அரசு மற்றும் 625 தனியார் மையங்களை இச்செயலி மூலம் தொடர்பு கொண்டு பயனடைலாம்.

**சேவை 7:- விளைப் பொருட்களின் சந்தை விலை அறிதல் :** விவசாயிகள் தாங்கள் உற்பத்திச் செய்த விளைப் பொருட்களுக்கேற்ற தகுதியான விலை பெறும் பொருட்டு, தமிழகம் முழுவதும் உள்ள 277 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில், ஏலத்தில் அன்றைய தேதியில் விற்பனையான விளைப் பொருட்களின் நிகழ் நிலை முறையில் (Real Time) விலையினை தெரிந்து கொள்ளலாம். அதற்கேற்றாற்போல் தங்கள் விளைப்பொருட்களை கூடுதல் விலை கிடைக்கும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்து சென்று பயனடையலாம்.

**சேவை 8:- வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரை பெறுதல் :** விவசாயிகள் தங்களது பகுதியில் அடுத்த 4 நாட்களுக்கான வானிலை நிலவரங்களான - மழை மற்றும் தட்பவெட்ப அடிப்படையில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிர் சாகுபடி பற்றிய அறிவுரைகளை அறிந்து கொள்ளலாம். இந்த அறிவுரைகள் ஒவ்வொரு 4 நாட்களுக்கு ஒரு முறை செயலி மூலம் வழங்கப்படுகிறது.

**சேவை 9:- வேளாண் விரிவாக்க பணியாளர்கள் வருகை :** அகில இந்திய அளவில் - கிராம அளவிலான வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகளை சந்தித்து ஆலோசனை வழங்கும் பொருட்டு நிரந்தர பயணத் திட்டம் ஒன்றை உருவாக்கி தமிழக வேளாண் துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது. இச்சேவையின் விவசாயிகள் மேலும் துரிதமாக பெறும் பொருட்டு, சம்மந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலரின் பெயர், கைபேசி எண், அலுவலரின் அடுத்த கிராம வருகை இடம் மற்றும் தேதியினை இச்செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் விவசாயிகள் மற்றும் துறை அலுவலர்களின் நட்பு பலப்படுத்தப்படுகிறது. இச்சேவையில் சுமார் 2500 வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள் ஒரு கிராமத்திற்கு மாதத்திற்கு இரு முறை சென்று விவசாயிகளை சந்ததித்து வருகிறார்கள்.

மேற்கூறிய ஒன்பது முக்கிய அடிப்படை சேவைகளை உள்ளடக்கிய “உழவன்” கைபேசி செயலியினை கூகுள் (Google Play Store) மூலமாக விவசாயிகள் தங்களின் கைபேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டு பயடையலாம்.

விவசாயிகள் இச்செயலியினை பயன்படுத்தி தமிழக அரசின் பல்வேறு சேவைகளைப் பெற்று தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**